# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு
## கல்வியாண்டு 2005-2006
## தமிழ்மொழி

வளர்நிலை 4 நேரம்: 90 நிமிடங்கள்

பெயர்:---------------------------- மொத்தப்புள்ளிகள் 100

(1) அடைப்புக்குறிக்குள் இருந்து மிகப் பொருத்தமான சொற்களைத் தெரிந்து கீறிட்ட இடங்களில் எழுதுக:-

1) தமிழ் நெடுங்கணக்கிலுள்ள முதலெழுத்துக்கள் ----------------- ஆகும்.
(பன்னிரண்டு, முப்பது, பதினெட்டு)

2) திராவிட மொழிகளின் அடிப்படை மொழி -------------------- ஆகும்.
(மலையாளம், தமிழ், சிங்களம்)

3) முதன் முதலாக உருவாக்கப்பட்ட இலக்கண நூல் -------------- ஆகும்.
(திருக்குறள், மணிமேகலை, தொல்காப்பியம்)

4) புணர்ச்சி என்ற சொல்லின் ஒத்த கருத்துள்ள சொல் --------------ஆகும்.
(பிரிதல், இணைதல், சிரித்தல்)

5) முத்தமிழ்க் காப்பியம் என அழைக்கப்படும் நூல் ----------------------- ஆகும்.
(நன்னெறி, நாலடியார், சிலப்பதிகாரம்)

6) மார்கழி மாதக் குளிர் காற்று ---------------------- வீசியது.
(அனலாக, வேகமாக, சில்லென்று)

7) நண்பர் என்பதன் எதிர்ப்பதம் பகைவர் போல தண்ணீர் என்பதன் எதிர்ப்பதம் ----------------- ஆகும்.
(வென்னீர், வெந்நீர், பன்னீர்)

8) மாணவன் தமிழ்ப் பாடத்தை ஐயந்தீரக் கற்றான் "ஐயந்தீர" என்ற சொல்லின் பொருள் ----------------
(தெளிவாக, மெதுவாக, பொருத்தமாக)

9) நீங்கள் அசுத்தமான பண்டங்களை வாங்கி ------------------------
(உண்டாதீர்கள், உண்ணாதீர்கள், உண்காதீர்கள்)

10) அப்பாவின் தம்பி சித்தப்பா, அம்மாவின் தம்பி ---------------------
(பெரியப்பா, மாமா, மைத்துனன்)

11) உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே ------------ களைவதாம் நட்பு.
(கடைக்கண், இடுக்கண், முக்கண்)

12) தமிழீழத்தில் உள்ள சிறுவர் இல்லங்களில் ஒன்று -------------- ஆகும்.
(பூஞ்சோலை, கலைச்சோலை, அறிவுச்சோலை)

13) முக்கனிகளும் முழுப் பயன் தருகின்ற காலம் ------------------ ஆகும்.
(ஆடி மாதம், தை மாதம், ஐப்பசி மாதம்)

14) தமிழர் விழாக் காலங்களில் --------------ப் பொழுதில் எழுந்து நீராடுவர்.
(வைகறை, மாலை, பகல்)

15) ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடி இருக்குமாம் ---------------
(நாரை, கொக்கு, கோழி)

16) சீனர்கள் சீனப் பெருஞ்சுவரை ---------------- எல்லைப் புறத்தை ஊடுருவாமல் இருப்பதற்காகக் கட்டினார்கள்.
(மங்கோலியர்கள், வியட்னாமியர்கள், கம்போடியர்கள்)

17) ஆற்றைக் கடக்கும் அக்கரை போகும் தண்ணீரில் கலக்காது. தானும் நடக்காது. அது ----------------
(படகு, பாலம், வள்ளம்)

18) எமது நாட்டையும், எமது மொழியையும் என்றும் --------------------
(போற்ற வேண்டும், மறக்க வேண்டும், தூற்ற வேண்டும்)

19) தண்ணுமை என்று அழைக்கப்பட்ட தோற்கருவியின் இன்றைய பெயர் ----------------- ஆகும்.
(மிருதங்கம், மேளம், பறை)

20) முற்காலத்தில் அரச கட்டளைகளை மக்களுக்கு அறிவிக்கப் பயன்படுத்தப்பட்ட முழவு -------------------
(மத்தளம், உடுக்கு, பறை)

21) ஒரு பக்கம் மட்டும் தோற்கண் உள்ள தோற்கருவி ------------------
(மேளம், முரசு, தப்பட்டை)

22) ஐந்து வீட்டுக்கொரு முற்றம் அது ----------------- ஆகும்.
(விரல், உள்ளங்கை, வானம்)

23) மணி + ஓசை என்பதனைச் சேர்த்து எழுதினால்---------------------

(மணிஓசை, மணியோசை, மணிவோசை)

24) தன் கொடியில் வீணையைச் சின்னமாகக் கொண்டிருந்த இலங்கை வேந்தன் --------------------- ஆவான்.

(எல்லாளன், இராவணன், துட்டகைமுனு)

25) இந்தக் கடையிலுள்ள பொருட்கள் ---------------------------- மிகத் தரமுடையவை.

(அவற்றுள், இவற்றுள், ஒவ்வொன்றும்)

26) "டிட்சி றெடு" என்ற நீண்ட இசைக் குழலை உலகுக்கு அளித்தவர்கள் ------------------------------------ ஆவர்.

(நியுசிலாந்து மக்கள், ஒஸ்திரேலியாவின் ஆதிக்குடியினர், சீனமக்கள்)

27) கடற் பெருக்கு என்னும் சொல்லைப் பிரித்தெழுதினால் ----------------

(கடல் + பெருக்கு, கடற் + பெருக்கு, கடல்ப் + பெருக்கு)

28) ஆடிக் கூழ் காய்ச்சப் பயன்படும் மா ------------------ .

(கோதுமை மா, சிவப்பரிசி மா, ஒடியல் மா)

29) நானூறு வெண்பாக்களைக் கொண்ட அறநூல் ------------------ ஆகும்.

(நன்னெறி, மூதுரை, நாலடியார்)

30) இன்று நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன்.------------------ அம்மா எனக்கு ஒரு கணினி வாங்கித்தந்தார்.

(ஏனென்றால், ஆகவே, எனவே)

2) கீழே காணும் பகுதியைப் படித்துத் தரப்பட்டிருக்கும் சொற்களில் இருந்து பொருத்த மானதைத் தெரிந்து கீறிட்ட இடங்களில் எழுதுக:-

தண்ணீர் நமக்குப் பல வழிகளிலும் பயன்படுகின்றது. தண்ணீர் இல்லாமல் நாம் உயிர் வாழ முடியாது. தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் -------------------------------- முக்கியமானது. தண்ணீர் நமக்கு எவ்வாறு கிடைக்கின்றது தெரியுமா? மழை --------------------------------- போது ஆறுகளிலும், ஓடைகளிலும் நீர் நிறைகின்றது. பின்னர் அது நீர்த்தேக்கங்களை ---------------------------------. அங்கே தண்ணீர் சேர்த்து வைக்கப்படுகின்றது. பின்பு அது --------------------------------- செய்யப்படுகின்றது. சுத்தம் செய்யப்பட்ட தண்ணீர் குழாய்கள் மூலம் நம் ---------------------------------- அனுப்பப்படுகின்றது. தண்ணீர் ஓர் அரிய பொருள் அதனால் அதைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

<table>
<tr><td>பெய்யும்</td><td>சுத்தம்</td><td>நீர்</td><td></td></tr>
<tr><td colspan="2">வந்தடைகின்றது</td><td colspan="2">வீடுகளுக்கு</td></tr>
</table>

(புள்ளிகள் 10)

3) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி வாக்கியங்களை நிறைவு செய்க:-

1) கொத்தளங்களில் படை வீரர்கள் தங்கியிருந்து காவல் --------------------------------

2) கடமையைச் செய்யத் ---------------------------------------------------------------------------------

3) மரக்கோலில் இருந்து பிறக்கும் நாதத்தை மண்ணின் ஓசை என்று

---------------------------------------------------------------------------------------------------------------

4) தமிழ்ப் பண்பாட்டை வாழ்வில் ---------------------------------------------------------------------

5) கோதை நாளை வீணை பயிலச் ------------------------------------------------------------------

(புள்ளிகள் 10)

4) கீழே உள்ள சொற்களில் பொருத்தமானதைத் தெரிந்து கீறிட்ட இடங்களில் எழுதுக:-

ஓட்டமும் நடையுமாக, திரள் திரளாக, படிப்படியாக,
கல்வி கேள்விகளில், வண்ண வண்ண.

1) பாப்பரசரைக் காண மக்கள்-----------------------------------------------------------------ச் சென்று கொண்டிருந்தனர்.

2) அப்பா பேருந்தைப் பிடிப்பதற்காக --------------------------------------------------ச் சென்றார்.

3) ---------------------------------------------------------- உயர்ந்தோர் குமுகத்தில் மதிக்கப்படுவர்.

4) பொருட்களின் விலை -------------------------------------------------- உயர்ந்து செல்கின்றது.

5) குயிலி------------------------------------------------------------ மலர்களால் மாலை தொடுத்தாள்.

(புள்ளிகள் 5)

5) கீழ்வரும் வாக்கியங்களில் சரியானதை (☑) எனவும் பிழையானதை (☒) எனவும் அடையாம் இடுக.

1) சிறு ஊறலும் நன்னீரானால் குடிக்க உதவும். ( )

2) தனி மரம் தோப்பாகும். ( )

3) கூட்டு முயற்சியால் அதிக பயனைப் பெறலாம். ( )

4) அறிஞர்களுடன் சேருவதால் அறிவைப் பெற முடியாது. ( )

5) உயிர்களைக் கொன்று உண்ணாதவர்களை எல்லோரும் தொழுவார்கள்.( )

(புள்ளிகள் 5)

(6) கீழே காணும் பகுதியைப் படித்துத் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழு விடை எழுதுக.

நாம் சோறு, மரக்கறி வகை, கீரை வகை, இறைச்சி, மீன், பருப்பு, பயறு, பழ வகை, பால், ஆகிய பல்வேறு விதமான உணவு வகைகளை உட்கொள்ளுகின்றோம். இவ் உணவு வகைகளில் தானியங்கள், மரக்கறி வகைகள், அவரையினங்கள், கீரை வகைகள், மற்றும் பழவகைகள் ஆகியவற்றை தாவரங்களில் இருந்தும் இறைச்சி, மீன், பால், முட்டை, ஆகியவற்றை விலங்குகளில் இருந்தும் நாம் உணவாகப் பெற்றுக்கொள்ளுகின்றோம். பருப்பு மற்றும் பயறு ஆகியன அவரை இனங்களாக வகைப்படுத்தப்படும். உப்பைத் தினமும் எமது உணவுடன் சேர்த்துக்கொள்வது மிகவும் அவசியமானதாகும். உப்பை நாம் உணவுடன் சேர்க்கையில் உணவானது சுவையூட்டப்படுகின்றது.

1) தாவரங்களில் இருந்து பெறப்படும் உணவு வகைகள் மூன்று எழுதுக?

----------------------------------------------------------------------------------------------------------------------

2) அவரை இனங்கள் எவை?

----------------------------------------------------------------------------------------------------------------------

3) விலங்குகளில் இருந்து பெறப்படும் உணவு வகைகள் 2 எழுதுக?

----------------------------------------------------------------------------------------------------------------------

4) எதைச் சேர்ப்பதால் உணவு சுவையூட்டப்படுகின்றது?

----------------------------------------------------------------------------------------------------------------------

5) உங்களுக்குத் தெரிந்த 3 மரக்கறிகளின் பெயர்களை எழுதுக?

----------------------------------------------------------------------------------------------------------------------

(புள்ளிகள் 20)

(7) படத்தை வைத்துக் கதை ஒன்றை உங்கள் கற்பனையில் எழுதுக:-
(20 சொற்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்)



இரண்டு நண்பர்கள் காட்டுப் பாதையில் நடந்து சென்றனர்.

(புள்ளிகள் 20)